5th July 1962]

கால்நடைப்பண்ணை (திருநெல்வேலி)

*141 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு கால்நடைப் பண்ணை அமைக்கும் திட்டம் உண்டா?

(இ) எங்கு எப்போது அமைக்கப்படும்?

(உ) அடிப்படைத் தேவைகள் எவை?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir.

(b) The exact place of location has not yet been decided. The farm will be established during the Third Five-Year Plan period; and

(c) Lands.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், இந்த ஜில்லாவிலுள்ள டெவலப்மெண்ட் கவுன்சில்களையும் இது சம்பந்தமாகக் கலந்து ஆலோசிக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : இது பற்றி டெவலப்மெண்ட் கவுன்சிலைக் கலந்து ஆலோசிக்கப்படமாட்டாது.

தண்டத் தீர்வை ரத்து செய்தல்

*142 கேள்வி.—திரு. ஏ. கே. சுப்பையா : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்காருக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் மூன்று வருடங்களுக்கு மேலாக விவசாயம் செய்துவரும் ஏழை விவசாயிகளுக்கு விதிக்கப்படும் தண்டத் தீர்வையை ரத்து செய்ய உத்தேசமுண்டா?

(இ) அவர்களுக்கு அந்த நிலங்களைப் பட்டா செய்து தரப்படுமா?

THE HON. SRI V. RAMAIAH : (அ) & (இ) No, Sir.

SRI C. CHIRANJEEVULU NAIDU : In view of the fact that every year, the Jamabandi Officers are issuing 'B' memos. in respect of certain lands on the ground that it was an encroachment, will the Government consider the possibility of assigning at least lands other than communal poramboke lands which were under occupation for four or five years, with a view to avoiding this sort of penalisation?

THE HON. SRI V. RAMAIAH : Sir, whenever land is available, it is assigned to the landless poor. But, in cases, where a particular land is required for Government purposes and if they forcefully occupy the land, they cannot allow them to occupy the lands and in such cases, they have to resort to this action. Whenever and wherever it is possible otherwise to assign lands to the landless poor, it is already being considered and assignment is also made.

[5th July 1962

திரு. மீ. கல்யாணசுந்தரம்: சார், பலாத்காரமாக விவசாயிகள் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறபோதுதான் இந்தத் தண்டத் தீர்வை விதிக்கப்படுவதாகச் சொன்னார்கள். கிராமாதிகாரிகளை திருப்தி பண்ணாதவர்களுக்கும் இந்தத் தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. நிலத்தின் தரத்தைப் பிரித்தது பல ஆண்டுகளுக்கு முன்னால். அதே உபயோகத்தில் இப்போதும் இருக்கும் என்று சொல்ல முடியாது. மாமூல் கொடுத்துக் கொண்டிருக்கும் பகுதிகளில் ஆட்சேபகரமாக இருந்தாலும்கூட அனுமதிக்கப்படுகிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? நிலத்தின் பாகுபாடுகளை மறுபடியும் பரிசீலித்து முடிவு செய்ய ஒரு அதிகாரியை நியமிப்பார்களா?

கனம் திரு. வி. ராமைய்யா: கனம் அங்கத்தினர் தன்னுடைய கருத்தை பட்ஜெட் விவாதத்தில் சொன்னால் நன்றாக இருக்கும். இப்போது இருக்கக்கூடிய நிலைமையில் ஆக்கிரமிப்பு என்று சொன்னால் அரசாங்கத்திற்குப் பல காரணங்களுக்காகத் தேவைப்படும் நிலத்தில் நிலமில்லாதவர்கள் குடியேறுவதைத் தான் குறிக்கும். அதிகாரிகள் இது பற்றி கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொள்வதைத் தடை செய்ய முடியாது.

திரு. ஏ. ஆறுமுகம்: தரிசு நிலங்களைப் பட்டா செய்வதில் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களின் சம்பந்தம் கோரப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது என்பது சர்க்காருக்கு தெரியுமா?

கனம் திரு. வி. ராமைய்யா: அந்த மாதிரித் தகவல் எதுவும் இல்லை.

திரு. மு. ஷண்முகம்: சாகுபடிக்கு லாயக்கான தரிசு நிலங்களெல்லாம் பெரும்பாலும் ஏழை மக்களால் பண்படுத்தப்பட்டு பயிரிடப்படுகிறது. அப்போதைக்கப்போது அதிகாரிகள் இஷ்டப்படி இந்த நிலங்களுக்கு அபராதத் தீர்வை போடுகிறார்கள். இதை மாற்றி நியாயமான முறையில் இந்த நிலங்களுக்கு தரத் தீர்வை மட்டில் வசூலிக்கப்படுமா?

கனம் திரு. வி. ராமைய்யா: அதிகாரிகளுடைய இஷ்டப்படி ஒன்றும் செய்துவிடமுடியாது. இப்போது இருக்கும் விதிப்படி எந்தெந்த நிலங்களுக்கு எந்தெந்த முறையில் தண்டத் தீர்வையோ 'பெனல்டி டாக்சோ' போடவேண்டுமோ அந்த முறையில்தான் போடப்பட்டு வருகிறது. இது பற்றி மேலும் பரிசீலனை செய்யவேண்டுமானால் பட்ஜெட் விவாதத்தில் கருத்தைத் தெரிவித்தால் நல்லது.

திரு. ஆ. கு. சுப்பையா: குறிப்பிட்ட நிலத்திற்கு மேல் சொந்த நிலம் உள்ளவர்கள் சர்க்கார் நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள். அவர்களை அந்த நிலங்களில் இருந்து வெளியேற்றி நிலமில்லாதவர்களுக்கு வழங்கப்படுமா?

கனம் திரு. வி. ராமைய்யா: நிலமிருக்கக் கூடியவர்களுக்கு மேலும் நிலம் 'அசைன்' செய்ய முடியாது. இது போல் யாரே

5th July 1962]

னும் செய்திருந்தால் அரசாங்கத்தின் கவனத்திற்கோ அதிகாரிகளின் கவனத்திற்கோ கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. பொன்னையா : பரம்பரையாக ஜமீன்தார்களாக இருந்து வந்தவர்கள் சர்க்கார் பூமியைச் சேர்த்து உழுது வந்தார்கள். இப்போது சர்வே செய்ததில் அந்தப் பூமிகள் எல்லாம் சர்க்காரைச் சேர்ந்தவை என்று தெரிய வருகிறது. அந்த நிலங்களை ஏற்கனவே விவசாயம் செய்து வந்த விவசாயிகளுக்கு கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வி. ராமைய்யா : நிலமில்லாத விவசாயிகளுக்கு, அரசாங்கத்திற்குத் தேவைப்படாத நிலங்களை விநியோகம் செய்து கொடுக்க வேண்டும். அந்த அடிப்படையில் இந்த விநியோகம் நடக்கும் என்று நம்புகிறேன்.

Agricultural College

* 143 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state--

(*a*) the present stage of the proposal to open a new Agricultural College during the Third Plan period; and

(*b*) the details thereof?

THE HON. SRI P. KAKKAN : No decision has yet been taken as to where the Second Agricultural College to be started during the Third Plan period is to be located.

திரு. எம். கலியாணசுந்தரம் : இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை என்பதை அறிய சந்தோஷப்படுகிறேன். முடிவு எடுப்பதற்கு முன்பு ஒரு ஆலோசனையை அரசாங்கம் கவனிப்பார்களா? புதிதாக ஏற்படுத்தப்பட இருக்கும் கல்லூரியைக் காவேரி டெல்டா பிரதேசத்தில் வைக்கும் யோசனை இருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. பரிசீலனை செய்யும்போது இது பற்றிக் கவனிக்கப்படும்.

SRI R. V. SWAMINATHAN : Sir, will the Hon. Minister be pleased to consider the location of this Agricultural College at Madurai, the headquarters of Pandya Nad as that will serve the three districts of Madurai, Ramanathapuram and Tirunelveli?

THE HON. SRI P. KAKKAN : The hon. Member's suggestion also will be considered.

திரு. கே. ஏ. மதியழகன் : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் விவசாய அபிவிருத்திக்கான காரியங்களை நாம் நிறையச் செய்ய வேண்டியிருக்கிறது. இன்றைய தினம் கோயம்புத்தூரில் ஒரு விவசாயக் கல்லூரியும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஒரு விவசாயக் கல்லூரியும் இருக்கிறது. அவற்றிலிருந்து முறையே 150, 50 மாணவர்களைத்தான் தயாரித்து அனுப்புகிறார்கள். இந்த நிலையில் இன்னும் ஒரு கல்லூரியை அமைப்பதால் நம்முடைய தேவையை நிறைவேற்றிவிட முடியாது. கோவையில் ஒரு ரூரல்